678

# ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அம்மன்

## ஸ்தல வரலாறும், தோத்திரப் பாடல்களும்.



...ஜகோபுரம்

..., : : தஞ்சாவூர்.


ஒவஸ: 38.21193
N69
164384

SRI BANGARU KAMASHI AMMAN DEVASTHANAM
THANJAVUR.



## விநாயகர் துதி

ஆனை முகனார்க் கடிவயிறு தான்பருத்துப்
பானையென வேயிருக்கும் பண்பென்னே—ஏனையம்
ஓங்கார மாகி உலகனைத்தும் உந்திதனில்
தாங்கரமற் றாங்குதலாற் றான்.

ஸ்ரீ பங்காரு காமாக்ஷி சரணங்களில் ஸமர்ப்பிக்கின்றோம்.

தஞ்சாவூர், மேலவீதி ஸ்ரீ பங்காருகாமாக்ஷியம்மன் கோயில்
ஸ்தானீகர்கள், நிர்வாகஸ்தர்களால் தொகுக்கப்பட்டது

உ

ஓம் சிவசக்தி மயம் ஜெகத்.

# முகவுரை

இப் பூமண்டலம் கோளரூபமாய் விளங்குகிறது. அது அறுபத்து நான்கு மாத்ருகா பீடங்களைக் கொண்டது. அதில் மிக மேன்மையுடையது காமராஜபீடம் தொண்டைமண்டல தலைநகரமாய் திகழும் ஸ்ரீ காஞ்சியில் உள்ளது. அக்காமராஜபீடத்தின் அதிஷ்டான தேவதையாய் ஸ்ரீ காமகோடி காமாக்ஷி விளங்குகின்றாள். பக்தர்களுக்கு அவர்களது இஷ்டார்த்தங்களை கடாக்ஷ வீக்ஷண்யாத்தால் கோடிக் கணக்காக தந்தருளுவதால் காமகோடியாக விளங்குகின்றாள். அத்தேவியின் அவ்யாஜ கருணைப் பிரவாகம் சோழமண்டலத்தையும் எட்டியது.

சோழ வளநாடு சோறுடைத்து எனப் புகழப்பெற்று விளங்கும் இந்நாட்டின் தலைநகராய் திகழும் சிஞ்சிசூழ். தஞ்சையில் அன்னை பவானியின் அருள்பெற்ற சத்ரபதி சிவாஜி அவர்களின் வழித் தோன்றலாகிய சத்ரபதி ஸ்ரீ துளஜா மகாராஜா II அவர்களுக்கு அருள்பாலிக்க காஞ்சியினின்றும் பங்காரு காமாக்ஷி எழுந்தருளி கோயில்கொண்டுள்ளாள். சிவசக்தியாயும் ஸ்ரீ வித்யாஸ்ரூபினியாயும் தூர்வாஸர், அகத்தியர் முதலிய தேவி பக்தர்களால் துதிக்கப்பெற்றவளாயும் விளங்கும் ஸ்ரீ பங்காரு காமாக்ஷியின் திரு உருவப்படமும் நித்திய பாராயணத்திற்கு உரிய தேவி ஸ்துதிகளும் புராண வரலாறும் நிர்வாகமும் இச்சிறு நூலில் சுருங்கக் கூறப்பட்டுள்ளது.

இந்நூல் சாரதா நவராத்திரி சமயம் வெளியிடப்படுவது பக்தர்கள் படித்து இன்புற்று ஸ்ரீ பங்காரு காமாக்ஷியின் அருளுக்குப் பாத்திரமாக வேண்டும் என்பதாம்.

தஞ்சாவூர்
11—10—69

தேவஸ்தானத்தார்.

# சிறப்புரை

காவிரிய பூவிரியும், காவேரியால் வளம்பெற்ற தஞ்சையிலே இன்று நின்று நிலவும் ஆலயங்கள் எண்ணில. தமிழரின் பண்பாட்டின் தொன்மையையும், மென்மையையும் மட்டுமல்லாது அவர்கள் இறைவனிடத்தில் கொண்டிருந்த அன்பின் ஆழத்தையும் இந்த ஆலயங்கள் அவனிக்கெல்லாம் எடுத்து இயம்புகின்றன. இவற்றுள் தஞ்சை நகரிலே, மேல வீதியில் கவினுக காட்சி தரும் அன்னை ஸ்ரீ பங்காரு காமாக்ஷி ஆலயத்தில் நவராத்திரி விழாவினையொட்டி இத் திருக்கோயிலின் தோற்றத்தையும் ஏற்றத்தையும் மட்டுமல்ல, வலிவையும் வனப்பையும், பொலிவையும் மக்களுக்கு நன் முறையில் எடுத்து இயம்பும் வகையாக ஆலய நிர்வாகத்தினர் திருக்கோயில் ஸ்தல வரலாறு, முறையாக தொகுத்தும் வகுத்தும் வெளியிட இருப்பதை கண்டு மகிழ்கிறேன். மக்கள் யாவரும் இதை படித்து பயன் பெறுமாறு வேண்டுகிறேன். அத்துடன் இந் நன் முயற்சியில் ஈடுபட்ட இந்த ஆலய நிர்வாகிகளுக்கு ஆட்சி துறையின் சார்பில் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(Sd.) **T. N. Singaravelu,**
Deputy Commissioner.
2—10—69.

# பதிப்புரை

ஸ்ரீ பங்காரு காமாக்ஷியம்மன் தோற்றம்பற்றிய புராண வரலாறு காஞ்சி க்ஷேத்திர மஹிமை மூர்த்தி. தீர்த்த மஹிமை பரதேவதையைப்பாடி ஸ்தோத்தரித்த ஸ்லோகங்கள் லலிதோபாக்கியானம். மார்கண்ட புராணம் மூக பஞ்சதி. காமாக்ஷி விலாசம், சாஸ்திரிகள் கீர்த்தனைகள், தனிப் பாடல்கள் முதலியனவனின்றும் எடுத்து எழுதப்பட்டுள்ள இந்நூல் இத் தேவியின் சிறப்பினை சுருங்கக்கூறுவதாகும், இந்நூல் வெளியிடுவதற்கு உதவியவர்கள்.

1. சத்ரபதி ராஜஸ்ரீ ராஜாராம் ராஜா சாகேப் அவர்கள், சீனியர் பிரின்ஸ் தஞ்சாவூர்.
2. சாமா சாஸ்திரிகள், ஜயந்தி விழா கமிட்டியார்.
3. ஸரஸ்வதி மஹால் நூல் நிலையத்தார்.
4. ஸ்ரீ சுவாமிநாத ஆத்ரேயர் அவர்கள்.
5. V. S. சர்மா அவர்கள்.
6. ஸ்தானீகர்கள் மற்றும் ஊக்கம் அளித்தோர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

இந்நூலை அன்பர்கள் யாவரும் படித்து தேவியின் கிருபைக்கு பாத்திர மாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அறங்காவலர் :

R. சுவாமிநாதன்.

T. N. ராமசந்திரன், B. Com. B. L.

V. K. கண்ணபிரான். B. A.

மேலாளர்.

ஸ்தானீக டிரஸ்டிகள் :

T. V. ஸ்ரீனிவாச சாஸ்திரிகள்.

R. சுந்தர சாஸ்திரிகள்.

தஞ்சாவூர்

11—10—1969

# தேவஸ்தானமும் நிர்வாகமும்.

**தேவஸ்தான நிர்வாகம் :** கி. பி. 1919க்கு முன்புவரை ஸ்ரீ காமாக்ஷி கோயில், ஸ்தானீகர்களின் ஏகதேச நிர்வாகத்தில் இருந்து வந்தது. ஸ்தானீகர்களின் ஒற்றுமையின்மையினுல் 1919ல் தஞ்சை சப் கோர்ட்டார் அவர்களால் மேற்படி கோயில் நிர்வாகத்திற்கென தனியான ஏற்பாடு (Scheme) செய்யப்பட்டது. அதன்படி ஐந்துபேர் கொண்ட தர்மகர்த்தாக் குழு நிர்வாகத்தை நடத்திவருகின்றனர். இந்த தர்ம கர்த்தாக்களுள் மூவர் சப் ஜட்ஜ் அவர்கள் நியமனத்தின் பேரிலும் ஸ்தானீகர்களுள் இருவர் தங்களுக்குள் தேர்தலின் மூலமும் பதவி யேற்கின்றனர்.

தேவஸ்தானம் சப்ஜட்ஜ் அவர்கள் பரிபாலனத்திலிருந்து அற நிலைய இலாகாவின் மேற்பார்வைக்கு கி. பி. 1959ல் மாற்றப்பட்டது. 24—8—66ல் அறநிலைய இலாகாவினர் நிர்வாக சௌகர்யத்தை முன்னிட்டு ஸ்கீமை மாற்றி அமைத்தனர். இதன்படி கோயில் நிர்வாகப் பொறுப்புகளை கவனிப்பதற்கென்று நிர்வாக அதிகாரி மானேஜர் என்ற பெயரில் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தர்ம கர்த்தாக்கள் அனைவரும் மூன்ருண்டு காலம் பதவி வகிக்கும் கௌரவ உத்தியோகஸ்தர்கள் ஆவார்கள்.

# ஸ்ரீ காமாக்ஷி விலாஸம்

## ஸ்ரீ காஞ்சி மகிமை

மூர்த்தி, ஸ்தலம் தீர்த்தம் இம் மூன்றாலும் சிறந்து விளங்குவது ஸ்ரீ காஞ்சிபுரம், கோரூபமாய் விளங்கும் பூமிக்கு இடையாக இருப்பதனுல் காஞ்சி என புகழப்படுகிறது.

ஏஷா பூமிர்ப்ரம்ஹபுத்ரி கோரூபேணுகிலம் ஜகத் காஞ்சிதேச : புரீகாஞ்சி தன்மத்யம் காம கோஷ்டகம்

உலகில் உள்ள உன்னதமான பொருள்களைக் கூறும்போது "நகரங்களுள் சிறந்தது காஞ்சி" என புகழப்படுகிறது. அயோத்தி, மதுரா, மாயாபுரி, வாரணஸி, காஞ்சி அவந்தி, துவாரகாபுரி ஆகிய ஏழு திவ்விய க்ஷேத்திரங்களையும் ஏழு மோக்ஷபுரிகளாக பாரத மக்கள் கொண்டாடுகின்றனர். இவ்வேழு மோக்ஷபுரிகளும், மனிதன் தரிசித்த மாத்திரத்திலேயே மோக்ஷத்தை அளிக்கக் கூடியன. இவ்வேழினுள் தமிழ் நாட்டில் திகழ்வது காஞ்சி. இங்கு தேவிகாமாராஜ பீடத்தில் பிரகாசிக்கிருள். தமிழகத்திலுள்ள பஞ்சபூத க்ஷேத்திரங்களுள் பிருதிவி ஸ்தலமாகக் கொள்ளப்படுவதும் ஸ்ரீ காஞ்சி. இக்காஞ்சி க்ஷேத்திரம் பற்பல அரசர்களுக்குத் தலைநகரமாகவும் கலா க்ஷேத்திரமாயும் விளங்கியது. ஸ்ரீ காஞ்சியை ஆண்ட அரசர்கள் பற்பல ஆலயங்களை நிறுவி இதனை கோயில் நகரமாகவே அமைத்தனர் எனவே அவற்றுள் மிக முக்கியமானவை ஸ்ரீ காமாக்ஷிஅம்மன் கோயில், ஏகாம்பரநாதர் கோயில், கைலாஸநாதர் கோயில், வரதராஜர் கோயில், குமரக் கோட்டம் கோயில் முதலியன சிறப்பானதாகும்.

இக்குமரக் கோட்டத்தில்தான் கச்சியப்ப சிவாச்சாரியார் கந்த புராணத்தையும், காஞ்சி புராணத்தையும் அரங்கேற்றியுள்ளார். இக் காஞ்சிமாநகரை, வேகவதி, பாலாறு, ஸர்வதீர்த்தம் முதலிய புண்ய தீர்த்தங்கள் பாவனமாக்குகின்றன. இவ்விதம் பல்வகைப் புகழ்பெற்ற காஞ்சிபுரத்திற்கு ஸத்ய விரத க்ஷேத்திரம் பிரம்ம சாலை, தபோவனம், திவ்விய க்ஷேத்திரம் த்வாத சாந்தீத முக்தி க்ஷேத்திரம், காமகோடிபுரி, தைஜஸ க்ஷேத்திரம், சக்தி க்ஷேத்திரம் முதலிய பற்பல பெயர்கள் வழங்கப்படுகின்றன.

## ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி கோயில்

ஸ்ரீ சக்ராகாரமாக அமைந்துள்ள காஞ்சிமாநகரின் பிந்துஸ் தானத்தில் ஸ்ரீ காமாக்ஷி கோயில் கொண்டு பிரகாசிக்கிருள். காஞ்சியினுள் எல்லாக் கோயில்களும் ஸ்ரீ காமாக்ஷி கோயில் நோக்கியே அமைந்துள்ளன. உத்ஸவ காலங்களில் எல்லா சுவாமிகளும் ஸ்ரீ காமாக்ஷியையே பிரதக்ஷிணமாக வருகின்றனர். கச்சியப்பர் கந்த புராணத்தில் பாடல் இணக்கப்பட்டுள்ளது. காமாக்ஷி தேவி ஆலயத்தை திசை மயக்கும் கோயில் சந்திர சூரியர் வலம் வரும் கோயில் எனச் சிறப்பித்துப் பாடியுள்ளார். எல்லா ஊர்களிலும் "சிவாலயங்களில் அம்பிகைக்குத் தனி மூலஸ்தான சன்னதியிருக்க காஞ்சியில் மட்டும் சிவாலயங்களில் ஸ்ரீ அம்பிகைக்கு மூலஸ்தான சன்னதி கிடையாது. மன்மதனுக்கு இராஜராஜேஸ்வரி அனுக்கிரஹம் செய்தவாறு அவ்வனுக்கிரஹத்தைப் பரிபாலிக்கும் பொருட்டு சிவபெருமானுக்குப் போகசக்தி உருவங் காணுதிருக்க சிவாலயங்கள் தோறும் கௌரியை இல்லாமற் செய்தனர். எனவே தனிக்கோயில்கொண்டு இராஜராஜேஸ்வரி இங்கு காமாக்ஷியாக விளங்குகிருள் இந்த காமாக்ஷி மேற்படி கோயிலில் ஐந்து ரூபங்களாகக் காக்ஷியளிக்கிருள். அவை பிலாகாசம் மூலகாமாக்ஷி, தபஸ் காமாக்ஷி, ஸ்ரீசக்கரம் ஸ்ரீபங்காரு காமாக்ஷி (தற்போது ஸ்ரீ பங்காருகாமாக்ஷி தஞ்சையில் தனிக்கோயில் கொண்டு விளங்குகிருள்.)

### பிலாகாசம்

பிலாகாசம் ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்மன் கோவிலில் காயத்ரி மண்டபத்தில் மூல காமாக்ஷீ கர்பகிரஹத்தினுள் வடபால் உள்ளது. இது பரம ரகஸ்யமான இடமாகும். இப் பிலாகாசத்தினின்றுதான் லலிதாம்பிகை பண்டாசுரனை வதம் செய்யும் பொருட்டு தோன்றினுள், தேவி தன் விஸ்வ ரூப காட்சியையும் பிர்மாதி தேவர்களுக்குக் காட்டியருளினுள்.

### மூல காமாக்ஷி

பந்தகாசுரனுடைய கொடுங்கோன்மையைச் சகியாத தேவர்கள் சிவபிரானின் கட்டளைக் கிணங்க கிளி உருக்கொண்டு ஸ்ரீ அம்பிகையைக் குறித்துத் தவம் செய்தனர். ஸந்தோஷித்த அம்பிகை பிலத்தினின்று வெளித் தோன்றி பிரளயத்தை ஏற்படுத்தினுள் பின் தான் ஒருத்தியாகவே காயத்ரி மண்டபத்தில் இருந்தவாறு தனது த்ரி நேத்திரங்களால் பிரம்ம விஷ்ணு ருத்திரர்களை சிருஷ்டித்தாள். இம் மூவரும் ஸ்ரீ அம்பிகையின் ஆக்ஞைப்படியே ச்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற முத்தொழிலேயும் செய்துவரும் பொழுது பந்தகா

சுரனோடு உலகம் விருத்தியடைந்தது. பின்னர் திருக் கைலாயத்தில் பந்தகாசுரனைக் கண்ட தேவி சினம் கொண்டு அவனை அழித்துக் கன்யா ரூபத்தில் ஸ்ரீ காஞ்க்ஷிபிலாகாசத்தை வந்தடைந்தாள்.

பிறகு அம்பிகையின் விருப்பப்படி காயத்ரி மண்டபம் நிர்மாணிக்கப் பெற்று கன்னிகை வடிவத்தில் பிம்பப் பிரதிஷ்டை செய்து தேவர்கள் தேவியை ஆராதித்தனர். ஆராதனையின் முடிவில் தேவர்கள் தாங்கள் பிரதிஷ்டை செய்த திருவுருவம் காணாமல் இராஜஇராஜேஸ்வரியாகிய திரிபுரஸுந்தரி நிஜஸ்வரூபத்துடன் ஆவிர்பவித்திருப்பதைக் கண்டார்கள்.

## ஸ்ரீ மூல காமாக்ஷி அவதார காலம்

ஸாவித்திரகல்பத்தில் ஸ்வாயம்புவன மன் வந்திரதில் க்ருத யுகத்தில் வைகுண்டத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணு மோஹினி அவதாரத்தோடு கூடியிருந்த காலத்தில் ஸ்ரீ முக வருஷம் பால்குன மாதம் சூரியன் கும்ப ராசியில் இருக்கும் காலம் மாசி மாதம் கிருஷ்ண பக்ஷ பிரதமை வெள்ளிக்கிழமை அருணோதய காலத்தில் பூச நக்ஷத்திரத்தில் மத்திய பாகத்தில் காயத்ரி மண்டபத்தில் பிலாகாசத்திலிருந்து ஸ்ரீ மூல காமாக்ஷி தன் ஸ்வரூபத்தோடு பிரகாசித்தாள்.

இவ்விதம் காக்ஷீயளித்த ஸ்ரீ தேவியைத் தேவர்கள் துதித்தும் பட்டாபிஷேகம் செய்தும் களிததனர். பிறகு தேவர்கள் ஸ்ரீ அம்பிகையை இக் காஞ்சியில் ஸாந்நித்தியமாக இருக்கவேண்டுமென்று பிரார்த்திக்க அம்பிகையும் ''ஸ்ரீ புரத்தில் எவ்வாறு ஸாமர்த்திய ரூபிணியாய் சக்தி என்ற பெயருடையவளாய் இருக்கின்றேனோ அவ்வாறே இவ்விடத்தில் காமாக்ஷீ என்னும் பெயருடன் ஸந்தானாதி வரங்களைத் தருபவளாய் திகழ்கிறேன் ஆகையால் நீங்கள் பிரதி தினம் என்னை தரிசித்து வாருங்கள் ஸ்ரீ புரத்தைக் காட்டிலும் இது உயர்ந்தது என்று யாவருக்கும் ஆக்ஞை செய்தாள்.

யதா ஸுதார்ணவே சாஹம் மம ஸ்ரீ புரஸத்தமே
ஸாமர்த்யரூபா ஜகதி சக்திரித்யாபிதானத:
காமாக்ஷீதி ததாத்ராபி ஸந்தானாதி வரப்ரதா
நிவஸாம்யமார யூயம் ஸதாமத்தர்சனே ரதா:
ஸ்ரீ புராததிகேத்ரைவ ஸ்திதிம் குருத நிச்சலாம்.

ஸ்ரீ அம்பிகையின் சொல்லைக்கேட்டு சந்தோசித்த ருத்திராதி தேவர்கள் ஸ்ரீ காமாக்ஷீயைப் பூஜித்தனர். ஸ்ரீ காமாக்ஷீயின் ஜென்ம தினத்தில் யரர் அவளைப் பூஜிக்கின்றனரோ அவர்கள் கோடி யாகம் செய்த பலனை அடைகின்றார்கள் என்று வரன் கொடுது பரமேசுவரன் ஸ்ரீ தேவி பீடத்தில் மறைந்தார்.

பின்னர் ஸ்ரீ பரமேஸ்வரன் மீண்டும் கோயிலுக்கு ஸ்ரீ தூர்வாஸ மகரிஷியின் உருவத்தில், கௌசிகர், கௌதமர், காச்யபர், ஆத்ரேயர் பரத்வராஜர், குண்டினர், முதலான தனி ஆறு சிஷ்யர்களுடனும் அவர்களுடைய புத்திரர்களுடனும் திரும்பிவந்து ஸ்ரீ காமாக்ஷியைப் பூஜித்தார். மேற்படி ஆறு சிஷ்யர்களேயும் பிர்ம்ம கல்பம் முடிய பூஜைக்கு நியமித்துப் பவழத்தை நடுநாயகமாக உடைய ஸ்வர்ண ருத்திராக்ஷமாலை, ஸௌபாக்கிய குங்குமம் கோபிசந்தனம் சந்தனம் முதலியவற்றை அச்சிஷ்யர்களுக்கு அம்பிகையின் உத்திரவுப்படி அலங்காரத்திற்குக் கொடுத்துச் சக்தி தீக்ஷையும் கிரமப்படி செய் வித்தார். ஸ்ரீ ஸௌபாக்கிய சிந்தாமணி என்னும் தந்திரப்படி ஸ்ரீ காமாக்ஷியை பூஜித்து வரும்படி ஆஞ்ஞாபித்தார். (அந்த சந்ததி யாரே காஞ்சியிலும் தஞ்சையிலும் ஸ்ரீ காமாக்ஷிதேவியை இன்றும் பூஜித்து வருகிறார்கள்.)

பின்னர்தான் இக்கிருதாயுகத்தில் ஸ்ரீ துர்வாஸ மகரிஷியும், திரேதாயுகத்தில் ஸ்ரீ பரசுராமரையும் துவாபுரயுகத்தில் ஸ்ரீதௌம் மியா சாரியாரையும் கலியுகத்தில் ஸ்ரீ மூகாச்சாரியாரையும் அதிஷ் டித்து ஸ்ரீ காமாக்ஷியை ஸ்தோத்தரிப்பேன் என்றார்.

தூர்வாஸஸ்வரூபணே ஸசிவ: புனராலயம்
பாஹ்யாதாகூத்ய சிஷையச்ச சகிதஸ்ஸ மஹாமுனி
கௌசிகாக்ய ரிஷே: புத்ரம் ததா கௌதம நந்தனம்
காச்யபஸ்ய சுதம் சைவ ததாத்ரேஸ்தனு சம்பவம்
பரத்வாஜ குமாரம் ச குண்டினீ புத்ரகம் ததா
கிரமாதாகாச பூம்யந்தம் பிரம்ஹ கல்பாந்த மேவச
பூஜார்தம் து மஹா தேவ்யா: பிரதிஷ்டாப்ய கிரமேண து
பிரவாள மேருசம் யுக்தாம் ஹேமருத்ராக்ஷமாலிகாம்
சௌபாக்ய குங்குமம் சைவ கோபீமிருச்சந்தனேபிச
தேவ்யாஸ்து சாசனதேவம் தத்வாலம்கார காம்யயா
கோபூ வஸ்திர ஹிரண்யானி தத்வா தீக்ஷாம் யதாக்ரமாத்
கிருத்வா சிந்தாமணிம் தந்திரம் தத்வா தேவ்யர்சனவிதிம்
அஹமத்ய து தூர்வாசர்: த்ரேதாயாம் ரேணுகாசுத:
தௌம்யோஹம் துவாபரயுகே கலௌ மூகா ஹ்வய:-கிரமாத்

அன்றியும் ஸ்ரீகாமாக்ஷீயை ஆத்மார்த்தமாக்ப் பூஜிக்கும் நிமித்தம் விக்ரக ரூபமாகவே தூர்வாஸர் ஸ்ரீ கமாக்ஷி கோயிலிலே பிரகாசிக் கிறார். ஸ்ரீ தேவியும் அவருடைய பூஜையை ஏற்றுக்கொண்டிருக்கும் நிமித்தம் அவரெதிரில் வீற்றிருக்கிறாள். திரிபுராம்பிகை இராஜ ராஜேஸ்வரி மஹாகமேசவல்லபை, காமாக்ஷி, காமகோடி, இவ்வைந்து நாமங்களும் திரிபுராம்பிகையாகிய பராசக்தியின் நாமங்களாகும்.



## ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அம்மன்

மேலவீதி, : : தஞ்சாவூர்.

## ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அவதார ரகஸ்யம்.

பிரம்மா ஒருசமயம் காஞ்சிபுரத்தில் ஸ்ரீ காமாக்ஷியை தரிசித்தபொழுது இந்த க்ஷேத்திரத்தில் ஸ்ரீ ஏகாம்பர நாதருக்கு விவாஹ மஹோத்சவம் நடத்த விரும்புகிறேன், அதனை எங்ஙனம் நிறைவேற்றுவது என வேண்டினார். ஸ்ரீ திரிபுராம்பிகை பிரம்மா வின் வேண்டுகோளுக் கிணங்க கீழ்க்கண்டவாறு கூறினாள். "என் னுடைய நெற்றிக்கண்ணிலிருந்து ஒரு சக்திமயமான திவ்ய ஜோதிஸ் தோன்றும். ஸ்ரீ ஏகாம்பரேசுவரருடைய தியானத்தினால் அந்தஜ் யோதி அழகான உருக்கொள்ளும் அந்த தேவியைப்போல் திவ்ய லோகத்தில் ஒரு விக்கிரகம் செய்து இந்தக்கோவிலில் துருவ ஸ்தானத்தில் பிரதிஷ்டை செய். விவாஹ காலங்கள் தோறும் ஏகாம்பரநாதருக்கு அந்த அம்பிகையை விவாஹம் செய்துவருவாய். அந்த அம்பிகையைப் போலவே விக்கிரகங்கள் செய்து அவைகளில் ஏகாம்பிகையை ஆவாகித்து இங்குள்ள சிவாலயங்கள் தோறும் மூலலிங்க சக்திகளாக அமைத்து சிவ தரிசனத்தோடு அம்பிகையை யும் தரிசித்து மகிழ்வாய் அந்த விக்கிரக ரூபமாயிருக்கின்ற அவ்வம் பிகைகளன்றி வேறு மூல சக்திகள் இந்த க்ஷேத்திரத்தில் பிரதிஷ்டை செய்தல் கூடாது. அன்றியும் ஸ்வர்ணாம்பிகையை விவாஹ தினத் தன்று ஏகாம்பரநாதருடைய ஆலயத்தில் எழுந்தருளச் செய்து விதிவத்தாக விவாஹத்தை நடத்து. மறுநாள் சாயங்காலம் உத்ஸவ கோலமாய் வீதிஉலா வரச்செய்யும் போது ஸ்வர்ண காமாக்ஷியை என்னுடைய ஆலயத்தில் எழுந்தருளச்செய்த பிறகு ஏகாம்ப ரேசுவரரை அவருடைய ஆலயத்தில் எழுந்தருளச் செய்யவேண்டும். ஸ்வர்ண காமாக்ஷிக்கு இரண்டுநாள் பூஜை துருவ ஸ்தானத்தில் நடைபெறுததால் பரிகாரமாக வோதோக்த தந்திர மார்க்கத்தினால் ஸ்ரீதூர்வாச சிஷ்யர்களைக் கொண்டு ஸகஸ்ரகலாபிஷேகமும் விசேஷ பூஜோபசாரங்களையும் செய்து பிறகு நித்திய பூஜையை நடத்துவாய் என்றாள்.

ஸ்ரீ அம்பிகையின் ஆக்ஞாப் பிரகாரம் பிரம்மா ஸ்ரீ காமாக்ஷியின் நெற்றியிலிருந்து சுவர்ணத்தால் தோன்றிய தேவியைப் போல் ஒரு தேவியைப் படைத்தார். அந்த அம்பிகை இரண்டு கண்களுடனும் இரண்டு கைகளோடும் வலது கையில் கிளியும் தொங்கும் இடது கையுடனும் குஞ்சிதமாய் நிற்கும் வைபவத்துடனும் வில் போன்று சற்று வளைந்துள்ள சரீரத்துடனும் சரீரத்தில் மூன்று வளைவுகளுட னும் (திரிபங்கி) திவ்வியாபரணங்களுடனும் உற்பத்தி செய்தார். பிரம்மா படைத்த அந்த திவ்விய மங்கள விக்கிரகமே ஸ்ரீ பங்காரு காமாக்ஷீ. (தற்பொழுது தஞ்சையில் உள்ளது)

## ஸ்ரீ பங்காருகாமாக்ஷி அவதார காலம்

சுவேத வராக கல்பம் பௌச்யமன் வந்தரத்தில் ஸ்ரீஹயக்ரீவர் அவதாரம் செய்த சமயம் (யுகம்) ஸ்ரீமுக வருஷம் கார்த்திகை மாதம் துலா ராசியில் சூரியன் உதிக்கும் சமயம் ஐப்பசி மாத கிருஷ்ணபக்ஷ தசமி பூரநக்ஷத்திர மத்திய பாகத்தில் ஸ்ரீ பங்காருகாமாக்ஷி அவதரித்தாள்.

ஸ்ரீ தேவியின் ஆஞ்ஞாப்பிரகாரம் பிரம்மா ஸ்ரீ பங்காரு காமாக்ஷீயை நிர்மாணித்து ஸ்ரீ காஞ்சி காமாக்ஷீ ஆலயத்தில் பிலத்துக்குத் தென்பாகத்தில் துருவஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்தார் பிரதிஷ்டை செய்த ஐப்பசிமாதம் முதல் ஆறுமாதம் காமாக்ஷீயை பூஜைசெய்து அந்த வருஷம் பங்குனி மாதத்தில் ஸ்ரீ காமாக்ஷீ ஏகாம்பர நாதர் திருக்கல்யாணம் செய்துவைத்தார். ஸ்ரீ அம்பிகையின் ஆணைப்படி ஸ்ரீ காமாக்ஷீ விவாஹத்தை முடித்துவைத்த பிரம்மா பின் ஒரு தாமரை மலரை எடுத்து ஸ்ரீ தேவியை தியானித்து ஆகாசத்தில் விட்டெறிந்தார். அம்மலர் ஆகாசத்தில் பட்டவுடன் சந்திரனின் அம்சமாக ஒரு சக்கிரவர்த்தி வெளிப்பட்டுவந்தார். அவனிடம் பிரம்மதேவன் வருஷந்தோறும் இக் கல்யாண மஹோத்வஸத்தைச் சிறப்பாக நடத்தி வரும்படி ஆக்ஞை செய்தார். அவ்வரசனே ஆகாச பூபாலன் எனப்படுவான், பிறகு பிரம்மா ஸ்ரீ அம்பிகையின் உத்திரவுப் படி ஸ்ரீ காஞ்சியிலும் பூமண்டலத்திலுள்ள எல்லாச் சிவாலயங்களிலும் அம்பிகைகளைப் பிரதிஷ்டை செய்து சிவபெருமானோடு அம்பிகையையும் தர்சனம் செய்து மகிழ்ந்து ஸத்தியலோகம் சென்றார்.

ஸத்தியலோகம் சென்ற பிரம்மா தன் கண்கள் ஒளி மங்கியதைக் கண்டார். அதனை அறிந்த சரஸ்வதி தன் கணவன் பார்வை இழந்த காரணத்தைச் சிவபிரானிடம் அறிந்தவாறு கூறுகிறாள். ஸ்ரீ காஞ்சியில் காமகோடி பீடத்தில் காயத்ரி மண்டபத்திற்குக் கீழே எது வரையில் பிலாகாசம் இருக்கிறதோ அதுவரையில் குண்டலினி கிரகம் முன்பு சிவபெருமானால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அவ் விடத்தை நீர் மிதித்ததால் அந்தகத்வம் வந்தது. எனவே தாங்கள் முன் போலவே அவ்விடம் போய் ஸ்ரீ சக்ர பூஜையைச் செய்வீர் ஆயின் அந்தகத்வம் நீங்கிவிடும். இல்லையெனில் இக் கண் குருடு ஒருக்காலும் நீங்காது என்றாள். இது கேட்ட பிரம்மதேவன் காமகோஷ்டத்திற்கு ஸரஸ்வதியுடன் சென்று ஸ்ரீ சக்ரபூஜையைச் செய்து மீண்டும் பார்வையைப் பெற்றார். பிரம்மா ஸ்ரீ பங்காரு காமாக்ஷீயை தரிசித்து

மனம் மகிழ்ந்து லோகோபகாரமாக "காயத்திரி மண்டபத்தை மிதித்த தோஷம் நீங்க ஸ்ரீ பங்காருகாமாக்ஷியை தரிசிக்கவேண்டும் அல்லது ஸ்ரீ சக்ர பூஜையை விதிவத்தாகச் செய்யவேண்டும் என்று வரன் அளித்தார்.

யத்பாபம் ஸபதே காஞ்சீபிலோர்த்வே பாதயோஜனுத்
தத்பாபான் முச்யதே ஹேம காமாக்ஷி ஸேவயா நர:
நசேத் ஸ்ரீ சக்ர ராஜம் வா யோர்சயேத் விதிபூர்வகம்
பிலோபரி பதஸ்பர்ச ஜாதம் நாஸ்த்யஸ்ய பாதகம்

ஸ்வர்ணங்கி, சுகஹஸ்தை, சூதலிங்கவல்லபை காமாக்ஷி தேவி, தர்ம தேவி இவ்வைந்தும் ஸ்ரீ பங்காருகாமாக்ஷியின் நாமாக்களாகும், இப் பங்காருகாமாக்ஷீயே" தஞ்சையின் தவப்பயனுக கி. பி 1786ல் பராபவ ஹ சாரதா நவராத்திரி மகோத்ஸவ காலத்தில் சத்ரபதி ஸ்ரீமத் துளஜா II மஹாராஜா அவர்களால் கோயில் நிர்மாணிக்கப் பெற்று மஹா கும்பாபிஷேகம் சிறப்பாகச் செய்துவைக்கப்பட்டது. அன்று முதல் ஸ்ரீ பங்காருகாமாக்ஷீ பக்தர்களுடை இஷ்டங்களைப் பூர்த்திசெய்துவருகின்ருள்.

ஸ்ரீ சத்ரபதி ஸ்ரீ துளஜாமகாராஜா II அவர்கள் புத்திரர் ஸ்ரீசத்ர பதி ஸ்ரீ சரபோஜி மகாராஜாவும் 1787-88 ல் முன்வாசல் ராஜ கோபுரம் கட்டி கும்பாபிஷேகமும் நடத்தி வைத்தார்.

# தஞ்சை செய்த தவப்பயன்

தஞ்சையின் தவப்பயனே ஐதர் அலியின் தொண்டை மண்டல படையெடுப்பு வியப்பாய் இருக்கிறதா ? ஆம்! அந்தப் படையெடுப்பால் நாடெங்கும் கலகம். கி. பி. 1565ல் விஜயநகரம் வீழ்ந்தது. ஹம்பியின் தெய்வச் சிலைகள் பழுது அடைந்தன. காஞ்சியில் உள்ள தெய்வச் சிலைகளும் பகைவர் கை பட்டு நாசப் படுமோ என அஞ்சும் நிலை விஞ்சியது காஞ்சி அர்ச்சகர்கள் உள்ளங் களில் தங்கள் தங்கள் உபாஸனா மூர்த்திகளுடன் பாதுகாப்புத் தேடி வேற்று ஊர்களுக்குக் கிளம்பினார்கள் ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி கோவில் ஸ்தானீகர்கள் மட்டும் விதிவிலக்கா என்ன? ஸ்ரீ பங்காரு காமாக்ஷி ஸ்ரீ காமகோடி ஸ்நபன மூர்த்தி திருவாபரணங்கள் முதலியவைகளுடன் கிளம்பி விட்டனர். வழியில் ஏற்பட்ட பற்பல விபத்துக்களையும் பொறுமையுடன் வென்று காடு மலை களைக் கடந்து செஞ்சியை அடைந்தனர்.

செஞ்சியை ஆண்டு வந்த சந்தான மகாராஜா சிறந்த தெய்வ பக்தர். ஸ்ரீ காமாக்ஷியுடன் வந்த ஸ்தானீகர்களையும், அவர்களது குடும்பங்களையும், வரவேற்றுப் பேராதரவு அளித்தார். ஸ்ரீ அம்பிகையின் தினசரி ஆராதனைக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுத்தார். அதுமட்டுமா? அன்று அவர் அம்பிகைக்கென கொடுத்த வெள்ளிச் சாமான்கள் பல இன்றும் ஸ்ரீ தேவி ஆராதனைக்குப் பயன்பட்டு வருகின்றன. இவ்விதம் சுமார் 15 ஆண்டுகள் செஞ்சியை அலங்கரித்தாள் அன்னை ஸ்ரீ பங்காரு காமாக்ஷி. பின்னர் பாதுகாப்பின் பொருட்டு பற்பல சிற்றூர்களிலும் ஸ்ரீ பராசக்தியுடன் ஸ்தானீகர்கள் தங்கி வந்தார்கள். அன்றியும் தினசரி ஸ்ரீ காமாக்ஷியின் ஆரா தனைகளையும் குறைவின்றி நடத்தி வந்தார்கள்.

கி. பி. 1624 முதல் உடையார்பாளையம் ஜமீன்தார்களின் பேராதரவில் இருக்க ஸ்ரீ அம்பிகை திரு உள்ளம் கொண்டாள். உடையார்பாளையம் பகைவர் எளிதில் புகாவண்ணம் இயற்கை அரணுடன் இருந்து வந்தது. ஜமீன்தாரின் பேராதரவும் பாது காப்பான இடமும் கிடைத்தது, ஸ்தானீகர்கள் குடும்பங்களுக்கு



சத்ரபதி ஸ்ரீ துளஜா மகாராஜா II

நிம்மதியை அளித்தது. எனவே அறுபது ஆண்டுகளுக்கு மேல் அம்பிகை அங்கேயே தங்கிவிட்டாள். ஜமீன்தாருக்கு ஏனோ சந்தேகம்? பாதுகாப்புத் தேடி வந்த அர்ச்சகர்கள் ஸ்ரீ அம்பாளுடன் வேறிடத்திற்கு கிளம்பிவிடுவார்களோ என்று உடையார் பாளையத்திலேயே அம்பாளை நிரந்தரமாக ஸ்தாபிக்க விரும்பினார் ஜமீன்தார். ஆனால் ஜமீன்தார் ஒரு தவறு செய்து விட்டார். ஸ்ரீ காமாக்ஷியுடன் வந்த எல்லா ஸ்தானீகர்களையும் சமமாக பாவிக்காது ஓர் குடும்பத்தாருடன் மட்டுமே நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

ஜமீன்தார் ஓர் குடும்பத்திற்கு மாத்திரம் பேராதரவு அளித்து வந்தது மற்றவர்களுக்கு மனக் கசப்பை அளித்தது. தஞ்சை மராட்டிய மன்னரின் நண்பரான ஆனக்குடி மிராசுதார் ஸ்ரீ சுவாமிநாத பிள்ளை ஸ்ரீ காமாக்ஷீ உபாசகர்களை ஆதரிக்க முன் வந்தார். பாவம்! ஜமீன்தார் தடுத்தும் உடையார்பாளையத்தில் ஸ்ரீ காமாக்ஷியை நிறுத்தி வைக்க முடியவில்லை, தன் தவற்றை ஜமீன்தார் உணருமுன்னரே அம்பிகையுடன் ஸ்தானீகர்கள் கொள்ளிடத்தின் அக்கரையிலிருந்து இக்கரைக்கு (உடையார் பாளையத்திலிருந்து ஆனக்குடிக்கு) வந்துவிட்டார்கள். உடையார் பாளையத்தில் ஸ்ரீ அம்பாள் இருந்த இடம் ஸ்ரீ காமாக்ஷீ மண்டபம் என்றே தற்போதும் அழைக்கப்படுகிறது.

ஆனக்குடி மிராசுதார் ஸ்ரீ சுவாமிநாத பிள்ளை சிறந்த பக்தர், பெரிய செல்வர். அது மட்டுமா? சங்கீத ரசிகரும் கூட, எனவே அம்பிகையுடன் ஸ்தானீகர்களை 15 ஆண்டுகள் ஆதரித்தார். பிறகு ஸ்ரீ காமாக்ஷியுடன் ஸ்தானீகர்கள் நாகூர் சிக்கல், விஜயபுரம் முதலிய ஊர்களிலும் பற்பல கிராமங்களிலும் தங்கி வந்தனர். கடைசியாக ஸ்ரீ அம்பிகை திருவாரூரில் சுமார் 60 ஆண்டுகள் தங்கி இருந்தார். ஊர் விட்டு ஊர் செல்லும்பொழுது பகைவர்கள் கையில் சிக்காமல் இருக்க வேண்டியும் ஸ்ரீ அம்பாள் கனமாக இருந்ததின் காரணமாகவும் பாடைகட்டி ஸ்ரீ அம்பாளை தூக்கி வந்ததாகக் கர்ண பரம்பரையாக கூறப்படுகிறது. வழியில்

சில கயவர்கள் ஸ்ரீ அம்பாளை மறித்துக் கொண்டனர். ஸ்தானீகர்கள் மன்றாடினார்கள் "வைசூரி" போட்டு குளிர்ந்த குழந்தை சோதனை செய்ய வேண்டாம் என்றனர். விடுவார்களா கயவர்கள்? என்னே ஆச்சர்யம்! பாடையை இறக்கிப் பார்த்தால் இறந்த குழந்தையாக காட்சி அளிக்கிறாள் ஸ்ரீ தேவி. ஸ்தானீகர்கள் மெய் சிலிர்த்தனர். அது மட்டுமா? சயவர்களை தேட வேண்டியதாயிற்று.

திருவாரூரில் ஸ்ரீ கமலாம்பாள் முன்னிலையிலேயே ஸ்ரீ பங்காரு காமாக்ஷியை ஸ்தாபித்து ஆரம்பித்து வந்தார்கள் திருவாரூரில் தங்கி இருந்த காலத்திலேயே ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் ஜனித்தார். திருவாரூரில் பிறந்தாலேயே முக்தி இல்லையா? சங்கீத மும்மணிகளும் திருவாரூரிலே ஜனித்திருப்பது அவர்களுள் உள்ள ஒற்றுமையையே காட்டுகிறது.

திருவாரூருக்கும் சோதனை காலம் என் செய்வார்கள் காமாக்ஷி பக்தர்கள். அம்பிகை தஞ்சை மன்னரின் கனவில் தோன்றி தன் தஞ்சை விஜயத்தை தெரிவித்துக் கொண்டாள். திருவாரூரை விட்டு கிளம்பிவிட்டாள் ஸ்ரீ காமாக்ஷி. ஆனால் தற்போது ஸ்தானிகர்களால் 3 விக்ரகங்களையும் தூக்கிச் செல்ல முடியவில்லை. ஸ்ரீ பங்காரு காமாக்ஷியை முதலில் தஞ்சைக்குத் தூக்கி வந்தனர். ஸ்ரீ காமகோடியை கமலாலயத்திலேயே விட்டுவிட்டார்கள். சிறிது காலத்திற்குப் பின்பே திரும்ப எடுத்து வந்ததாகக் கூறப்படுகிறது.

தஞ்சை வந்த ஸ்ரீ காமாக்ஷிக்கு கோயில் உடனே கட்டப்படவில்லை சுமார் ஆறு வருட காலம் மேல வீதியில் உள்ள ஸ்ரீ கொங்கணேஸ்வரர் கோயிலினும், ஸ்ரீ ஹனுமார் கோவிலிலும். ஸ்ரீ அம்பாள் பிரதிஷ்டை செய்யப்பட்டு தினசரி பூஜை நடைபெற்று வந்தது. ஸ்ரீ காமாக்ஷி மட்டும் தஞ்சையில் வந்து தங்கவில்லை, இன்னும் பற்பல கோவில் விக்கிரகங்களும் தஞ்சைக்கு வந்த ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி கோவிலில் தங்கி இருந்தார்கள்.

கி. பி. 1786-ல் நாட்டில் அமைதி ஏற்படவே எல்லா விக்கிரஹங்களும் திரும்பலாயின. ஸ்ரீ காமாக்ஷீயும் தஞ்சையில் இருந்து திரும்பிவிடுவாளோ ? ஸ்ரீ தேவியின் உள்ளத்தை யாரே அறிவார் ? சத்திரபதி ஸ்மந்த் துளஜேந்ர மகாராஜா தனிக் கோயில் ஸ்ரீ காமாக்ஷிக்கு கட்டத் தீர்மானித்து விட்டார். சிங்கப் பெருமானின் பழைய கோவில் கர்ப்பகிருஹத்தை பிரித்து தற்போதுள்ள ஸ்ரீ காமாக்ஷியின் கர்பகிருஹத்தை நிர்மானித்து மஹா கும்பாபிஷேகத்தை செய்து முடித்தார் மாமன்னர். அது மட்டுமா ? ஸ்தானீகர்களுக்கு அக்கிரஹாரம் அமைத்துக் கொடுத்தும் சுமார் 32 வேலி நிலத்தை சர்வமான்யம் செய்தும் பேராதரவு நல்கினர். ஸ்ரீ பங்காரு காமாக்ஷியும் தஞ்சையிலேயே தங்கிவிட்டாள். தஞ்சையையும் தன் அவ்யாஜ கருணையினல் ஸ்ரீ அம்பிகை பரிபாலித்து வருகிருள் இப்பொழுது சொல்லுங்கள் முகமதியர்களின் படையெடுப்பு தஞ்சையின் தவப்பயனே.

# ஸ்ரீ பங்காருகாமாக்ஷியம்மன் கோயில் தோற்றம்

கி, பி. 1780ல் தஞ்சையை ஆண்டுவந்த சத்ரபதி துளஜா மஹா ராஜா அவர்களால் வரவேற்று பேராதரவு அளிக்கப்பட்டார். முதலில் தஞ்சை மேலவீதியிலுள்ள கொங்கனேஸ்வரர் கோவிலிலும் பின்னர் மூலை அனுமார் கோவிலிலும் இருந்து ஆதரிக்கப்பட்டு வந்த அம்பாளுக்கு தனி ஆலயம் 1786ஞ புரட்டாசித்திங்கள் நவராத்திரிக்கு முன் சத்திரபதி துளஜாமகாராஜாவால் நிலம் ஆபரணங்கள் முதலிய அளிக்கப்பட்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறச் செய்யப்பட்டது.

**பூஜை முறை:—** இத்தேவியை அர்ச்சித்து ஆராதனை புரியும் அர்ச்சகர்களே ஸ்தானீகர்களாயும் நிர்வாகம் செய்துவந்தனர். இவர்கள் ஸ்மார்த்த வடமப் பிரிவைச் சேர்ந்தவர்கள் தூர்வாஸ மகரிஷியின் ஸௌபாக்கிய சிந்தாமணி என்ற கிரந்தப் பிரகாரம் நித்திய பூஜை. விசேஷ ஆராதனைகள் யாவும் நடைபெருகின்றன. இக் கோயில் வைதீக பிரதிஷ்டையாகும். தற்பொழுது தூர்வாஸ சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்த இரண்டு கோத்திரக்காரர்கள் கௌதம கோத்ரம் காஸ்ப கோத்திரம் பூஜைசெய்து வருகிறார்கள். இவர்கள் பரம்பரை அர்ச்சகர்களாகவும் ஸ்தானீகர்களாயும் நிர்வாகத்தில் பங்கு கொண்டவர்களாயும் உள்ளார்கள். நித்திய பூஜை 6 காலங்கள் நடைபெறுகின்றன.

### விசேஷ உற்சவங்கள்

சித்திரை— விஷு புண்ணியகாலம்

வைகாசி— விசாகம்

ஆனி— முப்பழ அர்ச்சனை

ஆடி— தக்ஷிணாயன புண்யகாலம் பூரம், 18ம் பெருக்கு

ஆவணி— மூலம். விநாயக சதுர்த்தி. கோகுலாஷ்டமி, வரலக்ஷ்மி விரதம்

புரட்டாசி— சாரதா நவராத்திரி உற்சவம் 9 நாட்களும் பிரதினமும் யாகசாலை பூஜை, அம்பாளுக்கு அபிஷேகம், வேதபாராயணம். சங்கீதம் ஹரிகதா உபன்யாஸங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

ஐப்பசி— பூரம், அம்பாள் ஜன்ம நக்ஷத்ர உற்சவம், அபிஷேகம் தீபாவளி பண்டிகை



சத்ரபதி சரபோஜி மகாராஜா II

கார்த்திகை— பரணி ஹோமம், கிருத்திகா தீப பூஜை

மார்கழி— திருக்காக்ஷி, ஆருத்திரா தரிசனம், பாவை விழா

தை— மகர சங்கர மணம்—கனு

மாசி— மகா சிவராத்திரி

பங்குனி— உத்திரம் ஸ்ரீ பங்காருகாமாக்ஷிக்கு விவாக மஹோற்சவம் அபிஷேகம் காரடையான் நோன்பு

கிரஹணம் போன்ற காலங்களில் விசேஷ ஆராதனை நடைபெறும்.

ஸ்ரீ பங்காருகாமாக்ஷிக்கு 11 அபிஷேக தினங்களாகும். நவராத்திரி 9 ஐப்பசிப் பூரம் 1. பங்குனி உத்திரம் 1 மற்ற விசேஷ காமகோடி அம்மனுக்கு அபிஷேகங்கள் நடைபெறும்.

பங்குனிஉத்திர திருக்கல்யாண உற்சவ தினத்தன்று சத்திரபதி துளஜா மகாராஜா காலம் முதல் அம்பாளுக்கு திருமாங்கல்யம், பொட்டு வஸ்திரம் முதலியன சீர் வரிசையாக அரண்மனையிலிருந்து பல்லக்கில் எடுத்துவரப்பட்டது. இப்பவும் திருக்கல்யாண உற்சவத்தன்று சீர் வரிசையும், பணமும், பொற்காசு H. H. ராஜாராம் ராஜா சாஹேப் சீனியர் பிரின்ஸ், ஜூனியர் பிரின்ஸ் குடும்பத்திலிருந்தும் அம்பாளுக்கு கொடுக்கப்படுகிறது. மேலும் அக் குடும்பங்களில் இன்றும் கல்யாணம் செய்வதற்கென்று உதவி கோரி வருபவர்களுக்கு திருமாங்கல்யத்திற்கு ஆகும் செலவை கொடுத்து உதவும் வழக்கத்தை மேற்கொண்டுள்ளனர்.

கும்பாபிஷேகங்கள் — கி.பி. 1788—89ல் தஞ்சை மன்னர் சத்திரபதி ராஜஸ்ரீ சரபோஜி (II) (சத்ரபதி ஸ்ரீ துளஜா மகாராஜா II ன் ஸ்வீகாரப் புதல்வர்) அவர்கள் ராஜகோபுரமும் சில மண்டபங்கள் கட்டிக் கொடுத்ததாகவும் ஸ்ரீ காமாக்ஷி, காமகோடி கோபுரங்கள் பழுது பார்த்து வர்ணம் வைத்துக் கொடுத்ததாகக் கோவிலில் மராட்டி லிபியில் கல்வெட்டுள்ளது.

6—6—1941ல் தற்போதைய ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்களால் கோவில் முழுவதும் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது.

7—4—1963 தேவஸ்தான நிதி கொண்டு தர்மகர்த்தாக்களால் ஜீர்ணோத்தாரண மஹா கும்பாபிஷேகம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் திருமுன்னர் செய்துவைக்கப்பட்டுள்ளது.

## கோயில் பழக்க வழக்கச் சிறப்புகள்.

விஷ்ணு ஆலயங்களில் இருப்பதுபோன்று ஸ்ரீ காமாக்ஷியிடம் "சடாரி" ஒன்று இருக்கிறது. அபிஷேக காலங்களிலும், உபயத்திலும் அம்பிகைக்குப் புணுகு சட்டம் சாத்துவது வழக்கம். பிரதி சாரதா நவராத்திரியிலும் நவமியன்று ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ அம்பிகைக்கு பட்டு வஸ்திரம் அளித்தும், விசேஷ அர்ச்சனைகள் செய்தும் வழிபடுகிறார்கள். பங்குனி உத்திர திருக்கல்யாணத்துக்குத் தஞ்சை இளவரசர்களால் ஸ்ரீ தேவிக்கு திருமாங்கல்யக் காணிக்கை அளிக்கப்படுகிறது. இதைப் பெற்றுவர பல்லக்கில் ஸ்ரீ அம்பிகை பிரஸாதத்துடன் அரண்மனைக்குத் சென்று இளவரசர்களுக்குப் பிரஸாதம் அளித்து மாங்கல்யம் பெற்றுவருவது வழக்கம் பிரதி வருஷமும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் செய்யும் வியாஸ பூஜையில் முதல் பிரஸாதமாக ஏற்றுக்கொள்வது ஸ்ரீ பங்காரு காமாக்ஷி பிரஸாதமே அன்றியும் ஸ்ரீ பங்காரு காமாக்ஷிக்கே முதலாவதாக ஸ்ரீ பெரியவர்கள் ஸம்பாவனை செய்வது குறிப்பிடத்தக்கதாகும். இக்கோவில் ஸ்தானீகர்களே ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளின் பிரதம சிஷ்ய பந்துத்வம் வகிக்கிறார்கள். ஸ்ரீ அம்பாளுக்குச் சாத்தப்படும் மலர்மாலைகள் உஷத் காலத்திற்கு முன்பும், சாயரக்ஷைக்கு முன்புமே களையப்படும் இடை நேரங்களில் எக்காரணம் கொண்டும் எடுப்பதில்லை. ஸ்தானீகர்கள் எவரேனும் ஸ்வீகாரம் செய்துகொள்ள விரும்பினால் ஸ்வீகாரத்துக்கு முன்பே ஸ்ரீ தேவி ஆராதனைக்கு பாத்தியதை உள்ள ஒரு நபரையே ஸ்வீகாரம் செய்துகொள்ளவேண்டும். வேறு ஒருவரை ஸ்வீகாரம் செய்துகொண்டால் அக்குழந்தைக்குப் பூஜா பாத்தியதை கிடையாது.

**எங்கள் அபிலாஷைகள் :** இவ்வாலய நிர்வாகிகள் பொது ஜனங்களின் சௌகர்யத்தை முன்னிட்டு அறநிலைய இலாகாவின் அனுமதியுடன் தேவஸ்தான உபரி நிதியில் இருந்து தஞ்சையில் ஒரு கல்யாண மண்டபம் கட்ட இருக்கிறார்கள். மற்றும் ஸ்ரீ காமாக்ஷி, காமகோடி கர்ப்பக் கிரகங்களுக்கு

வெள்ளிக் கதவுகள் அமைக்கவும், பிரதி வருஷமும் ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் ஜயந்தியைச் சிறப்பாக தேவஸ்தான ஆதரவில் கொண்டாடவும் ஆவன செய்ய விரும்புகிறோம்.

ஷை கோவிலின் வழிபாடுகளிலும், சிறந்த நிர்வாகத்திற்கும் பொதுமக்கள் கூறும் நல்லாலோசனைகளைக் கேட்டு அவற்றிற்குப் பெருமதிப்பளித்து செயல்பட தேவஸ்தானத்தார் முயலு வோம். ஸ்ரீ அம்பிகையின் ஆராதனங்களுக்கு அறக்கட்டளைகள் ஏற்படுத்திய பெரியோர்களின் கருத்தறிந்து அவர்களுடைய நோக்கத்தைப் பூர்த்தி செய்வதே எங்கள் குறிக்கோளாகும்.

தானபாலனயோர்மத்யே தானுத்ச்ரேயானு பரலனம் |
தானுத்ஸ்வர்கமவாப்னோதி பாலனுதச்யுதம் பதம் ||

இதற்கிணங்க செயல்படுவதே எங்கள் பெருவிருப்பம். அது எங்கள் கடமையாயினும் பலனுமுண்டல்லவா.

---

சர்வமான்யங்களும் கட்டளைகள் உபயங்கள்:

1. கி. பி. 1786ல் தஞ்சை அரசர் சத்ரபதி ராஜஸ்ரீ துளஜா மகாராஜா அவர்களின் தினசரி ஆராதனங்களுக்கும் உற்சவங் களுக்கும் 32 வேலி நன்செய் நிலம் தஞ்சை வெண்ணாற்றங்கரையை ஒட்டி (கோவிந்தராவ் தோட்டம்) சர்வமான்யம் அளித்துள்ளார்கள்.

2 கி. பி. 1875ல் தஞ்சை ராணி ஸ்ரீமதி காமாக்ஷி பாய்சாகேப் அவர்கள் உஷகால கட்டளைக்காக ரூ. 5000ம் தினசரி குங்குமார்ச்சனை சுக்கிரவாரக் கட்டளைக்காக ரூ. 500 மூலதனமாக அளித்துள்ளார்கள். மேற்படி உஷக்கால பிரஸாதம் தேசாந்திரிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

3. காஞ்சீபுரம் ஸ்ரீ பச்சயப்ப முதலியார் அவர்களின் தர்ம நிதியி லிருந்து இரவு இரண்டாம் கால தீபாராதனை நடத்தியும் பிரஸாதங் களை தேசாந்திரிகளுக்கு விநியோகித்தும் வருகிறார்கள். இந்த தர்மத்தை ஸ்ரீ முதலியார் அவர்களின் தர்ம பரிபாலனக் காரர்கள் தங்கள் மேற்பார்வையிலேயே நடத்திவருகிறார்கள்.

4. உடையார்பாளையம் ஜமீன்தார் ஸ்ரீ முத்துவிஜயரங்க காளப்பத் தோளக்க உடையார் அவர்கள் 55 ஏக்கரா நிலம் திருச்சி ஜில்லாவில் உள்ள காருக்குரிச்சியில் அளித்துள்ளார்கள். இதன் வருவாயைக் கொண்டு அகண்ட தீபமும் சகஸ்ரநாம அர்ச்சனையும் செய்து அதன் பிரஸாதத்தை தேசாந்திரிகளுக்கு வழங்குகிறார்கள். ஆடி 18க்கு என பக்தர் ஒருவர் ரூ. 250 மூலதனம் வைத்து விசேஷ ஆராதனை நடத்த ஏற்பாடு செய்துள்ளார்கள்.

ஸ்ரீ பச்சையப்ப முதலியார் அவர்கள் அறக்கட்டளை (தமிழ்) கல்வெட்டு தஞ்சாவூர்.

காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியாருடைய தர்மம் சகலருக்கும் பிரசித்தமாகத் தெரியும் பொருட்டும் நிரந்தரமான ஞாபகத்தின் பொருட்டும் செய்யும் விளம்பரமாவது.

இறந்துபோன புண்ணிய புருஷராகிய மேற்படி பச்சையப்ப முதலியாரவர்களாலே வைக்கப்பட்டிருக்கும் லக்ஷம் வராகனுக்கு வரப்பட்ட வட்டிப் பணத்திலின்றும் தஞ்சாவூரில் ஸ்ரீ காமாக்ஷி அம்மன் சன்னதியில் சாயரக்ஷை கட்டளைத் தர்மமானது கனம் பொருந்திய சுப்ரீம் கோர்ட்டுக் கவர்மெண்டு அதிகாரிகளால் தர்ம விசாரணை கர்த்தாக்களாகநியமிக்கப்பட்டு சென்னப்பட்டிணத்திலிருக்கும் இந்து சபையாரவர்களுடைய உத்திரவின்படி சாலிவாகன சகாப்தம், சூ எ ள க ா ய சு வு ¹ த்துக்குச் சரியான சுபகிருது வு ¹ முதல் வருஷங்களுடைய வராகன் செலவுள்ளதாக நடந்துவருகின்றது மேற்படி மூலதனம் கனம் பொருந்திய சுப்ரீம் கோர்ட்டு அதிகாரிகளுடைய உத்திரவின்படி சென்னப்பட்டணத்திலிருக்கும் ஜெனரல் திரொசரியென்னும் கவர்மெண்டாருடைய பொக்கிஷத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது.

ஷை தர்மம் கிரமமாக நடவாவிட்டால் தர்மத்தில் சிரத்தை உள்ளவர்கள் மேற்படி சபையாரவர்களுக்குந் தெரியப்படுத்தவேண்டியது.

## :: சரஸ்வதிமஹால் மோடி குறிப்புகள் ::

தஞ்சை சரஸ்வதி மஹால் நூல்நிலையத்தில் ஸ்ரீ பங்காரு காமாக்ஷியின் கோயில் திருப்பணி பற்றியும் மஹாராஷ்டிர மன்னர்களால் நித்ய பூஜைக்கு அளித்தவை பற்றியும் மோடிலிபியில் அரசாங்க உத்திரவுகளும், குறிப்புகளும் உள்ளன. அவற்றை தொகுத்தால் அதுவே ஒரு தனி நூலாகும். ஆதலால் சில குறிப்புகள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன.

### சத்ரபதி துளஜாமகாராஜா II

1. காமாக்ஷியம்மன் 'ஆலயம் கோட்டையில் கட்டுவதற்கு கட்டிட வேலைக்காரர்களுக்கு கிராமங்களிலிருந்து சாமான்கள் கொண்டுவந்துகொடுக்க உத்திரவிடப்பட்டிருக்கிறது. (N. B. 617 B 507) வருஷம் அரபிஹினர்சுர்ஸன் 1186 ஆங்கில ஆண்டு 1785 A D. மாதம் ஸர்சன் 8ம்நாள் விவரம்.

250 மூங்கில் நல்லதாக சுமார் 50′ நீளம்
750 திருவாதி (திருவையாறு)
750 கும்பகோணம்
500 மாயூரம்
500 மன்னார்குடி ஆக 2500 மூங்கில்கள்
500 மர வளைகள் நாடுகளிலிருந்து
200 நாண்கு நாடுகளிலிருந்து
400 ஒரத்தநாட்டிலிருந்து
100 ஒக்கநாட்டி.லிருந்து ஆக மொத்தம் 500 வளைகள்
2000 கீற்றுகள்
1000 திருவாதி
1000 கும்பகோணம் ஆக 2000

இந்தமாதிரியாகக் கொண்டுவந்து கொடுக்கிறது.

எழுதியவர்: **அன்னாஜிராகரி சுப்பண்ணா ஜபானி நீலண்ணா**

2. New Bundle 900 No. C B. 854. Item No. 4.
சத்ரபதி சரபோஜி II வுர்தன் அரபி வருடம் 1200 ஆங்கில ஆண்டு 1799 A D.

ஸ்ரீ பங்காருகாமாக்ஷீ அம்மனுக்கு எழுதிக்கொடுத்த ஜாப்தா.

ஆஸ்வீஜ சுத்த நவராத்ரி உற்சவத்திற்காக வருஷாவருஷம் கொடுக்குப் வழக்கம்போல் சர்க்காரின் உத்திரவு:

நகரா யானை 1

திருமஞ்சன யானை 1

கார்கானு சங்கீத மேளம் கொடுக்கிறது,

வெண்ணாற்றங்கரையிலிருந்து திருமஞ்சனம் கொண்டு வருவதற்கு யானை கார்கானு மேளத்துடன் போய்வருவதற்கு கோட்டை வாசல் அதிகாரிக்கு உத்திரவாகவேண்டும்.

இதைத் தவிரவும் கோவில் விஷயமாக தேவதாசிகள் கோவிலில் 9 நாளும் ஆட்டம் ஆடவேண்டும் என்ற உத்திரவு தேவதாஸிகளின் மத்தியஸ்தரிடம் ஆகவேண்டும் இம்மாதிரியாக 9 நாளும் ஆட்டம் ஆட உத்திரவாகவேண்டும்.

கையெழுத்து ராமாஜி முறை.

## ஸ்ரீ காமாக்ஷி பஞ்சரத்னம்.

1) ப்ராதஸ்மராமி ஜகதாம்
ஜனன்யாச்சரணும்புஜம் l
ஸ்ரீமத்ரிபுரஸௌந்தர்யா :
நமிதாயா ஹராதிபி : il

2) ப்ராதஸ்திபுர ஸௌந்தர்யா :
பஜாமி சரணும்புஜம் l
ஹரிர் ஹரோ விரிஞ்சிச்ச
ஸ்ருஷ்ட்யா தீந் குருதேயயா 1l

3) ப்ராதஸ்திரிபுர ஸௌந்தர்யா :
நமாமி பதபங்கஜம் l
யத் பாத்யமம்பு சிரஸி
பாதி கங்கா மஹேசிது : lI

4) ப்ராத: பாசாங்குச சரச்
சாப ஹஸ்தாம் நமாம்யஹம் l
உத்ய தாதித்ய ஸங்காசாம்
ஸ்ரீமத்ரிபுர ஸௌந்தரீம் l l

5) ப்ராதர் நமாமி பாதாப்ஜம்
யயேதம் பாஸதே ஜகத் l
தஸ்யாஸ்திரிபுர ஸௌந்தர்யா :
தத் ப்ரஸாதாந் நிவர்த்ததே 1l

6) யச்லோக பஞ்சகமிமம்
ப்ராதர் நித்யம் படேன் நர : l
தஸ்மை தத்யா தாத்ம பதம்
ஸ்ரீமத் த்ரிபுர ஸௌந்தரீ 1l

## பொழிப்புரை.

சிவபெருமான் முதலியோரால் போற்றப்படும் த்ரிபுரஸௌந்தரியின் திருவடியினைக் காலையில் நினைந்து வணங்குகிறேன். அவளது அருளாலயே பிரமன், விஷ்ணு, ருத்ரன் ஆகியோர் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய செயலைச் செய்கின்றனர். அம்பிகையின் தொடர்பு பெற்ற கங்கையை, சிவபெருமான் தம் தலையிலேந்திப் போற்றுகிறார். கதிரவனின் கிளரொளிபோல் பிரகாசிக்கும் த்ரபுர சுந்தரியின் அருளால் உலகமே ப்ரகாசித்து இயங்குகிறது. அம்பிகையைப்பற்றிய இந்த ஐந்து ச்லோகங்களையும் தினமும் காலையில் படிப்போர்க்கு அல்லல் அகன்று, அவளருள் கிட்டும்.

## ஸ்ரீ "காமகோடி" நாம ப்ரபாவம்.

ஸ்ரீ காஞ்யில் வீற்றிருக்கும் மூல காமாக்ஷியின் ஐந்து சிறப்புப் பெயர்களில், ஸ்ரீ காமகோடி என்கிற நாமாவின் விசேஷ மகிமைபற்றி ஸ்காந்த புராணத்திலுள்ள ஸ்ரீ காஞ்சீ மஹிமை (ருத்ரகோடி மஹிமை விரிவாகப் பேசுகிறது. அதுபற்றிய சுலோகங்கள் கீழே தரப்படு கின்றன.

1) உபாஸதே மனஸ்யேவம்
பூயோ காஞ்ச்யாம் யமீச்வரா : 1
ஸஏவ விக்ரஹோ தேவ்யா :
மூலபூதோத்ரி ராட்புவ : 11

காஞ்சியில், ஈச்வரர்கள், மலைக்கும், பூமிக்கும் காரணமான யாரை மனதில் இம்மாதிரி உபாஸிக்கிருர்களோ அதுவே ஸ்ரீ தேவியினுடைய உருவமாகும்.

2) நான் யோஸ்தி விக்ரஹோ தேவ்யா :
காஞ்ச்யாம் தன் மூல விக்ரஹ : 1
காமகோடி ஸ்மிருதஸ்ஸோயம்
காரணுதேவ சிந்நப : 11

காஞ்சியில் ஸ்ரீ தேவியின் மூல விக்ரஹம் தவிர வேறு உருவம் இல்லை. சித் ஸ்வரூபமான ஆகாசமே காரணத்தினுல் காமகோடி என்று நினைக்கப்படுகிறது,

3) யத்ர காமக்ருதோ தர்ம :
ஜந்துனு யேன கேனவா 1
ஸகிருத்வாபி ஸதர்மாணும்
பலம் பலதி கோடிச : 11
தேனே தம் காம கோடீதி
பிலத்வாரம் ப்ரஸித்திமத் 11

இங்கு எவரும் விருப்பத்துடன் ஒருமுறை செய்யும் தர்மம் கோடி மடங்கு பலனைத் தருமாதலால், இதற்கு காமகோடி என்ற புகழ் மேவி நிலவுகிறது.

4) உக்தோதவா ச்ருத : காம :
காமேசோ தனத : ச்ருத : 1
தத் கோடிதா பீடசக்தி :
காமகோடிரிதி ச்ருதா 11

பொருளைக் கொடுப்பவர் காமேச்வரனுவார். அதனை கோடிமடங் காகக் கொடுப்பவள், பீட சக்தியாகிய காமகோடியாவாள்.

5) அதவா பஹு தா காமா :
பசுபத்னீ ஸு தாதய : 1
தேஷாம் கோடிப்ரதாயத்ர
தேவ்யாஸ்தே பிலரூபிணீ 11
காமகோடி விமானம் தத்
ப்ரஸித்தம் யத்ர சின் நப : 1

வேண்டுவோர்க்கு, பசுக்கள், குழந்தைகள் **முதலிய**வைகளை வழங்கும் தேவியானவள் பல ரூபமாக விளங்கும் **இடத்திற்கு** காம கோடி விமானம் என்று பெயர். அது சிதாகாச **ஸ்வரூபமாகும்.**

6) ஆகாச சரீரம் ப்ரம்ம
ஸநாதம் பிந்து ஸம்யுதம் 1
பிலரூபேணவை காஞ்ச்யாம்
ப்ரத்யக்ஷம் மோக்ஷதம் பரம் 11

ப்ரணவ ஸ்வரூபமான ப்ரம்மமே காஞ்சியில் பால வடிவா**யிருந்து** கொண்டு, ஒப்பற்ற மோக்ஷத்தை வழங்குகிறது.

7) அதவா ருத்ர நேத்ராக்னி
நிர்த்தக்க : காம ஏகக : 1
ஸஸ்ருஷ்டோ லீலயா மாத்ரா
நேத்ராப்யாம் கோடி ஸங்க்யயா 11
காமகோடீதி விக்யாதம்
காஞ்ச்யாம் யச்சின் மயம் நப : 11

சிவபெருமானது நெற்றிக் கண் பார்வையினல் சாம்பலாக்கப் பட்ட மன்மதனை, எந்த அன்னை, விளையாட்டாக தம் அருட் பார்வை யால் கோடிக் கணக்காக உற்பத்தி செய்தாளோ அந்த அன்னையே சிதாகாசஸ்வரூபமாகக் காஞ்சியில் திகழ்கிருள். அவளே காமகோடி ஆவாள்.

8) க இதி ப்ரம்மணோ நாம
தநகாரோ ஹரிஸ்மிருத ; 1
மகாரோ ருத்ர இத்யுக்த :
த்ரய : காம இதிச்ருதா : 11
தே பிரம்ம விஷ்ணு ருத்ராச்ச
கோடி வாரம் யுகேயுகே 1
யத்பிலாதுத் கதாஸ்தஸ்மாத்
காமகோடி ரிதிஸ்மிருதா 1

க பிரமனையும், அ திருமாலையும், ம சிவபிரானையும் குறிக்கும். இம் மும்மூர்த்திகளும், காஞ்சியிலுள்ள எந்த பிலத்வாரத்திலிருந்து யுகந்தோறும் தோன்றுகின்றனரோ, அதனுல் அது காமகோடி என்று போற்றப்படுகிறது.

9) அதவா கேதி வித்யோக்தா
வேத வேதாந்த ரூபிணி 1
மேதி லக்ஷ்மீர் விபூதிஸ்யாத்
தேது யந்நேத்ர கோடிஜே 11
காமகோடி ரிதிக்யாதா
காஞ்ச்யா மீசகுடும்பினீ ''

க என்ற எழுத்து, வேத வேதாந்த ஸ்வரூபிணியான வித்யாதி தேவதையாம் ஸரஸ்வதியைக் குறிக்கும். அஷ்டைச்வர்யங்களுக்கும் அதி தேவதையான லக்ஷ்மியைக் குறிப்பது ம என்ற எழுத்தாகும் இந்த இரு தேவதைகளும் எவளது கடைக்கண் பார்வையால் இயங்குகிருர்களோ அவளே காமகோடி எனப்படுவாள்.

10) யத்ர தேஷாமவஸ்தானம்
ச்ரேயஸே ஜகதாம் பத: 1
காம கோஷ்டாக்ய யாசாபி
ப்ரஸித்தி மகமத்பிலம் 11

உலகிற்கு மங்களத்தை உண்டாக்கும் இடம் 'காம கோஷ்டம், என்றும் போற்றப்படுகிறது.

## ஸ்ரீ அம்பாளின்மீது பாடப்பட்டுள்ள துதிகள்.

1 ஸ்ரீ காமாக்ஷி ஸுப்ரபாதம்
மாதர் நமாம இஹபாக்யஜுஷோ பவத்யா
காதும் சுபோதய மனுன்மிஷிதப்ரபோதா :
யத்ப்ரேரயஸ்யதிசிராய கிருதாவமுஷ்யாம்
தன்ன : சுபாய மஹதே நயதே தயாதே

2 யன்னித்ரிதம் துரபனேய பவப்ரஸங்க
வ்யாமோஹ மக்னமதிபி : ஸுசிரேனஜீவை :
தத்தேஸுசீத கருணமிருத ஸேகபுத்தை
உத்காதுமத்ர மிலிதம் தவஸுஸ்ப்ரபாதம்

3 மாத : பயோதிசயனஸ்ய ஜகத்திதாய
நித்யோத்யதஸ்ய நிரபேக்ஷதயாத்ருதஸ்ய 1
உத்போதினீ விஜயஸே மதுகை டபாரே :
கே வா வயம் கலயிதும் தவஸுப்ரபாதம்

4 ப்ரம்ஹ ப்ரஸுப்தமசலம் விததபிரதிஷ்டம்
ஜாகர்த்தி கௌசலயுதம் த்வனுப்ரவேசாத் 1
ஸார்த்தம் விநோதபடு விஸ்த்ருமத்ய லோக்யம்
தஸ்யாணவோ வயமுசீ மஹிஸுப்ரபாதம்

5 பாலா நிமான் ம்ருகமரீசி கயா பராச ;
காமாக்ஷசாரகுடகான் ப்ரதிசந்த்ய மோகான் 1
ஆத்மோன்முகான் கலயஸே தயமானலீலா
காமாக்ஷி தேவி லலிதே தவஸுப்ரபாதம்

6 அத்வைத தர்சன மஹாபததீபிகாயா :
ஸ்ரீ காமகோடி குருபீட பரம்பராயா :
ஆதஸ்யஸ்ய சங்கரகுரோ : ஹ்ருதிலப்த நிஷ்டா
வித்யாமயி விஜயஸேதவ ஸுப்ரபாதம்

7 காஞ்சி புராதுபகதர் கனகஸ்வரூபா
தஞ்சாபுரம் நிஜபதாச்ரித பக்தவர்கை :
ஸ்ரீ ராமகிருஷ்ண நிலயாந்தர மத்ய தேசே
லப்தாஸ்பதா விஜயஸேதப ஸுப்ரபாதம்

8 ஸௌபாக்ய சிந்திதமணி பிரதி தவிரதரட்யா :
பட்டாரகா ஸபதி துர்வஸன பிரசிஷ்யா :
ஆராதனுர்த்த முபயாந்தி கிருஹீததீர்த்தா :
காமாக்ஷி தேவி லலிதே தவ ஸுப்ரபாதம்

9 ஸ்ரீ சக்ரமேருஸதனே புரதோ நிதாய
ஸ்வராஜ்யமாகலயதி விரதபங்கபாஜாம்
அஸ்மாத்ருசாம் ஸ்வநிருபாதிதயாப்ரவாஹை :
உத்தாரிணீ விஜயஸே தவ ஸுப்ரபாதம்

10 ப்ராத்ராபி தே துரபவாஹ்ய தமோபராணும்
சாட்யா பஹார நிபுனத்வ மிவாததாஞ
தேவ்யந்தராய தனதுர்லப சாட்யவைரி
பாதாம்புஜா விஜயஸே தவ ஸுப்ரபாதம்

11 பூர்வோத்ராஸு ச துலாஜஷ பல்குனீஷு
கிலுப்தாபிஷேசன விதிர் நவராத்ரகாலே
ஆர்த்தார்த்தி பங்கஹ்ருதயாம கணஸி பக்த
பாஷ்பாஞ்சிதேதரதிஞ தவ ஸுப்பராதம்

12 வாணீ ரமா ச வசினீமுகவாகதீச்ய :
குஹ்யாபதான சரிதானி விவேசயந்தி
நித்யானமத்க்ரஹ வரான் விநியோஜயந்தீ
பக்தேஷ்டஸாதனவிதென தவ ஸுப்ரபாதம்

13 துஸ்ஸாததுர்வஹதுருத்தர க்ருத்யஜாத—
துக்கேன பாவிதிவஸோதய காதராணும்
சேதாம்ஸீ நைஜக ருணுப்லவனென்மிஷத்தீ—
சக்த்யா விகாஸயஸி தேவி ஸகெபிரபாதம்

14 ரவிவம்சய நிருபைரபி பூஜ்யபதே
ரகுநந்தன தாரநாநாந்த்ருவரே
விரஜயெனவத பாக்யவிதானசணே
சரணம் பவ நோ வரதா பவ ந :

15 அபராதச தாகுவிதாஸ்து வயம்
ந ஹி தைவத மன்யதுபைதுமலம்
ஜனனீ தனயாபச தானவதீ—
த்யதிவிச்வஸிதா : சரணம் பவ ந :

---

16.4384
சென்னை-600 005.



## ஸ்ரீ அகஸ்திய முனிக்ருதா
## ஸ்ரீ லலிதா பஞ்சதசாக்ஷரீ ஸ்துதி.

1 கல்யாண சைல தன்வா கரத்ருதகும்பாக்ஷமாலிகா முத்ர : l
கலயது மம கல்யாணம் கரிசர்மதர. கிருபாபயோராசி : ll

2 ஏகாத்மகத்வதி ஷணுமேதய தீமிசஜீவயோர் நமதாம் l
ஏகாந்தவாஸலப்யாமேகாம் புண்யாவலீம் நுமச்சப்போ : ll

3 ஈசோர் தவபுயஸ்யா ஈப்ஸித் பங்திர்யதங்க்ரி நதஸுலபா l
ஈகாரரூபிணீம் தாமீச்வர பதநீம்ஹ்ருத சதாகலயே ll

4 வப்யந்தேகிலவித்யா : லப்தாவஸரைர்யதீய மந்திரஜபே
லக்ஷ்மி கீர்வினுதரஸா லக்ஷ்யா பூயான்மதீய சித்தஸ்ய ll

5 ஹ்ரீம் காரபத் மப்ருங்கௌ ஹ்ரீம்கார விருத்தி சீல நாஸுலபௌ
ஹ்ரீம்கார கிரிம்ருகேந்த்ரௌ ஹ்ரீம்காரேணவ பாவயாமி
சிவௌ ll

6 ஹரதாதா சுஜடத்வம் ஹரிததி பாராத்ய பாதபாதாஜ : l
ஹரிணும்க கவித சூடோ ஹ்ருதவர்ஷமார்த ; குலாத்ரி கன்ய
கயா ll

7 ஸத்யம் ஞான மிதீமே ஸகலாம்னுயோ வதந்தி யத்ரூபம்
ஸத்குருமுகைகவேத்யாம் ஸன்மதிதாம் நௌமி தாம்பரா
மனிசம் ll

8 கர்மபிராத்மானுகுணை கலிதாமல பாவசித்தகஞ்சாதை ; l
கதிபய புருஷவரெண்யை கதமபிபுத்தம் நமாமி சசி மௌளீம் l

9 ஹதரிபுவர்கைச்சாந்தை : ஹரிஹயபத்மோத்பவாதி பதவி
முகை:
ஹம்ஸவரை : பரமாத்யை ஹஸ்தாம்புஜபூஜிதம் நமாமி ஹரம் ll

10 லலிதாம் கவித்வஸரணீம் லபதே மூகோபி யத்கிருபாலேசாத் l
லம்கெசாஹித வினுதாம் லம்போதர மாதரம் நமஸ்யாமி ll

11 ஹ்ரீம்காரகெஹக்ருஹிணௌ ஹ்ரீம்காரபயபயோதி கல்பதரூ l
ஹ்ரீம்காரவன மயூரௌ மயூரௌ ஹ்ரீம்கார சரீரிணௌ
சிவௌவந்தே ll

12 ஸம்யங்நிருத்ய சேத ஸகலானி நிக்ருஹ்ய பாஹ்ய கரணுனி l
ஸததம் யத பிரஹ்ருதயே ஸமாதி பாவ்யாம் நமாமி ஜகதம்பாம் ll

13 கணபுக்கபிலாராத்ய : கதிதாதிகஸௌக்யதானக்ருதீக்ஷ : l
கரவித்ருத ஹரிணபால : கலாபிவ்ருத்யை மமாஸ்து காமேச : ll

14 லலனுபிஸ்த்ரி தசானும் லலினுதர்கீதை : ஸ்துகாத்ம சாரித்ராம் l
லஸதலக பாலதேசாம் லப்யாம் யோகைர் நமாமி லலிதாம்பாம் ll

இ அ 5138 · 21193
N69

15 ஷ்ரீம்காரஸெளதராஜென ஷ்ரீம்காராம் போதிபூர்ணஸித
கிரணௌ 1
ஷ்ரீம்கார்வாச்யரூபௌ ஷ்ரீம்நிஷ்குடகோகிலௌ
சிவௌவந்தே 11

## ஸ்ரீ லலிதா மங்களாஷ்டக ஸ்துதி.

மங்களம் ஜகதம்பாயை மங்களாலய கீர்தயே
சிருங்கார்ரஸ பூர்ணுயை ஸ்ரீ தேவ்யை ஜயமங்களம்.
அணிமாதி மஹாஸீத்தி யோகினீ ஸேவிதாங்க்ரேய
மணித்வீபாதிவாஸீந்யை மஹாதேவ்யை ஸுமங்களம்
பிந்துபீடநிவாஸிந்யை பிரம்ஹானந்தாத்ம சக்தயே
மந்தார வாடிகா மத்ய மந்திராயை ஸுமங்ளம்
தயேச்சாகாந்தி நித்ராதி லஜ்ஜாதி ஸ்வாத்மபூதயே
மாயேச்வர்யை மஹா தேவ்யை ஸர்வஞாயை ஸுமங்களம்
ஸ்ரீ சக்ரராஜ மத்யஸ்த திவ்யமங்கள மூர்த்தயே
கேசராதி ஸமஸ்தாத்ம ஸம்விதே ஜயமங்களம்
ஸோமபானு ஹயக்ரீவ மகேசஸ்வானு பூதயே
காமகும்போத்பவமனு பாஸிதாயை ஸுமங்களம்
முனிபுங்கவ நந்தீச ஸுரேச பரிபாவிதே
தனேசவாஸ்வனுதே ஸ்ரீ வித்யே ஜயமங்களம்
மங்களம் லலிதே மாத : மங்களம் ஸர்வ மங்களே
மங்களம்தே பராசக்தே மங்களம் த்ரிபுராம்பிகே
ஸ்ரீ தேவி மங்களம்யஸ்து படேநித்ய மனன்யதீ
தஸ்யஸர்வம் பவேத்ஸத்யம் மங்களாஞம்ச மங்களம்
கௌதமான்வய ஸம்பூத காமாக்ஷயாராதகேன வை
க்ரோத பட்டாரகாநந்த நாதேன ரசிதா ஸ்துதி.



ஸ்ரீ காமாக்ஷியும் ஸ்ரீ சியாமா சாஸ்திரிகளும்

## ஸ்ரீமூக மஹாகவி இயற்றிய ஸ்ரீமூக பஞ்ச திசஸ்லோகங்கள்

காரண பரசித்ரூபா காஞ்சிபுர ஸீம்னி காமபீட கதா 1
காசன விஹரதி கருணா காச்மீரஸ்தபக கோமலாங்கலதா 11

கஞ்சன காஞ்சிநிவயம் கரத்ருதகோதண்ட பாணஸ்ருணிபாசம்
கடினஸ்தனபர நம்ரம் கைவல்யானந்த கந்தமவலம்பே 11 2

ஐச்வர்யம் இந்து மௌலெ: ஐகாத்ம்யப் ரக்ருதிகாஞ்சி மத்யகதம்
ஐந்தவகிசோரசெகரம் ஐதம்பர்யம் சகாஸ்திநிகமானும் 11 3

லீயபுரஹரஜாயெ மாயே தவதருண பல்லவச்சாயே 1
சரணே சந்தராபரணே காஞ்சீ சரணே நாதார்த்தி
ஸம்ஹரணே 11 4

காமபரி பந்திகாமினி காமேச்வரி காமபீட மத்யகதே
காமதுகா பவகமலே காமகலெ காமகோடி காமாக்ஷீ 11 5

ஸமர விஜய கோடி ஸாதகானந்த தாடீ 1
ம்ருது குணபரிபேடி முக்ய காதம்பவாடி
முனிநுத பரிபாடி மோஹிதா ஜாண்டகோடி 11 6

பரம சிவ வதூடீ பாதுமாம் காமகோடீ
ஜய ஜய ஜகதம்பசிவே ஜய ஜய காமாக்ஷி ஜய ஜயாத்ரிஸுதே
ஜய ஜய மஹேச தயிதே ஜய ஜய சித்தகன கௌமூதீ தாரே 11 7

---

## ஸ்ரீ பங்காரு காமாக்ஷீயம்மனே பூஜித்து வழிபட்டவரும் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவருமான ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் கிருதிகள்.

ராகம்: வராளி] [தாளம்: சாபு

ப. காமாக்ஷி பங்காரு காமாக்ஷீ
நன்னு ப்ரோவவே —காமாக்ஷி

அ. தாமஸமேலே ராவே
ஸாமகானலோலெ ஸுசீலே —காமாக்ஷி

ச. (ஸ்வரஸாஹித்யம்)
நாமனவி வினு தேவி நீவே கதியனி
நம்மினானு மாயம்ம வேகமே
கருணஜூடவம்ம பங்காருபொம்ம —காமாக்ஷீ

ச. ச்யாமக்ருஷ்ண பரிபாலினி (அம்ப) சுக
ச்யாமலே சிவசங்கரி
சூலினி ஸதாசிவுனிகி ராணி-வி
சாலகருணி சாச்வத ரூபிணி —காமாக்ஷீ

---

ராகம்: கல்யாணி] [தாளம்: ஆதி

ப. சங்கரி சங்கரி கருணாகரி ராஜராஜேச்வரி
ஸுந்தரி ஸரஸ்வதி கௌரி அம்ப —சங்

அ. பங்கஜதள நேத்ரி கிரிராஜ குமாரி
பரமபாவனி பவானி ஸதாசிவ குடும்பினி —சங்

ச. ச்யாமக்ருஷ்ணஸோதரி
சிசும் மாம் பரிபாலய சங்கரி
கரிமுக குமார ஜனனீ காத்யாயனி கல்யாணீ
ஸர்வசித்த போதினி தத்வஜ்ஞான ரூபிணி
ஸர்வலோகாய திசமங்களம் சுபமங்களம் —சங்


---

## எழுசீர் விருத்தம்.

கருணையே வடிவாங் காமாக்ஷீ தேவி
கருதிடுமடிய னேன் மனத்து
மருவியே நீயும் மாண்பொடு தங்கி
மாமயலகற்றுத லோடு
பெருகிடு வாழ்வும் இன்பமும் விளங்கப்
பிரியமோடருள் செயல்வேண்டும்
அருமறை புகழுஞ் சிவமெனுங் கனலோடு
அமைந்த சிற்ஜோதியம்பிகையே.

## ஸ்ரீ காமாக்ஷியம்மன் மீது கமலபந்த வெண்பா.

ஆதிநதி பாதிமதி பூதிபதி மீதிலதி
காதலா னேற்றே கடிமணங்கொள்—ஜோதியே
பங்காரு காமாக்ஷீ பற்றில்லேன் மெல்லிதயம்
பங்கே ருகத்தமர்ந்து பார்.



கமலபந்த வெண்பா,

**பொழிப்புரை :—** ஆதியில் பகீரதனுல் இப் பூவுலகிற்குக் கொண்டுவரப்பெற்றதாகிய கங்கைநதியையும் பிறைச்சந்திரனை யும், விபூதி என்னும் திருநீற்றையும் அணிந்துள்ள பசுபதியாகிய சிவபெருமான் மீது அதிகரித்த அன்பினுல் தவங்கிடந்தே அவ ரைத் திருமணஞ்செய்துகொண்ட ஒளிபிழம்பே சுவர்ண காமாக்ஷியே நீ உன் கமலாஸனத்தைத விட்டு உன்னையன்றி வேறு பற்றுக்கோடில்லாத அடியேனின் மிருதுவான (இளகிய) இதய மாகிய கமல மலரின் கண்ணே விருப்புடன் எழுந்தருளியிருந்து கடைக்கண்ணுல் பார்ப்பாயாக (கடாக்ஷிப்பாயாக)

---

## எழுசீர் விருத்தம்

1. கருணையே வடிவாங் காமாக்ஷி தேவீ !
கருதிடு மடியனேன் மனத்து
மருவியே நீயும் மாண்பொடு தங்கி
மாமய லகற்றுத லோடு
பெருகிடு வாழ்வும் இன்பமும் விளங்கப்
பிரியமோ டருள்செயல் வேண்டும்
அருமறை புகழுஞ் சிவமெனுங் கனலோடு
அமைந்தசிற் ஜோதியம் பிகையே

## சிலேடை வெண்பா

### ஸ்ரீ காமாக்ஷியைத் துதித்தல்

கஞ்சி குடியாளே கம்மஞ்சோ றுண்ணுளே
வ்யஞ் சினங்களொன்றும் வேண்டாளே
நெஞ்சுதனி லஞ்சுதலையாவார்க் காறுதலை யாவாளே
கஞ்சமுக காமாக்ஷி காண்

**பொருள் :—** கஞ்சிகுடியாதவளும் கம்மஞ்சோற்றை யுண்ணுத வளும், பதார்த்தங்களை யொன்றும் விரும்பாதவளும், மனத்தில் அச்சமுள்ளவர்களுக்கு அச்சத்தை தணிப்பவளும் தாமரை மலர் போன்ற முகத்தினையுடைய காமாக்ஷியம்மையேயாம்

**மற்றுமொரு பொருள் :—** காஞ்சிநகரத்திற் குடிகொண்டிருப்பவள் ஏகம்பனது சோற்றை உண்ணுதவள் கொடிய கோபத்தை விரும்பாதவள் ஐந்து சிரங்களையுடைய சிவனது கண்களுக்கு மனோகரமானவள் பஞ்சமஹா பாதகங்களைச் செய்தவர்களுக்கும் அவற்றைப் போக்குவதில் சிவபெருமான் தலையில் விளங்கும் புனிதகங்கையாவாள்.

**கச்சியில் காமாக்ஷியம்மையைத் தரிசிக்கையில்**
**கவிக் காளமேகம் பாடியது.**

மாக்கைக் கிரங்குருகும் வளர்சக்ரவாகப்புள்ளும்
தாக்கசர பங்குழைந்த தெவ்வாறு சகதலத்தை
ஆக்கிப் பெருக்கித் திருவளச்சாலையி லன்னமிட்டு
காக்கைக்கொரு கொக்கின் கீழேயிருக்குங் கருங்குயிலே

**பொருள் :—** ஒரு பெண்ணுகிய உனக்குச் சிவபெரு எப்படிக் குழைந்தார் என்றும் குயிலாகிய உனக்கு ச எப்படிக் குழைந்தார் என்றும் இருவகையாகப் பொருள் கே காமாக்ஷியம்மை சம்பா நதியில் மணல் இலிங்கஞ் செ பூசித்திருக்கும்போது வெள்ளம் வரக்கண்டு இலிங்கத்தைத் விக்கொண்டதனால் முலைத்தழும்பும் வளைத்தழும்பும் பட்டு லிங்க மழிந்தது வரலாறு. "திரு வரச்சாலையிலன்னமி காக்கைக்கு" என்றது முப்பத்திரண்டு தருமத்தையும் ஈ நெல்லைக்கொண்டு செய்வதைக் குறித்தது. குருகு, சக்ர சரபம், காக்கை, கொக்கு, குயில் எனப் பறவைப் பெயர்கள் ( ணயந் தோன்றவந்தன. சிவபெருமான் சரப ரூபங்கொன் நரஸிங்கத்தை செயித்தற் பொருட்டு.

உலகங்களைப் படைத்து வளர்த்து திரு அறச்சாலையில் அ மிட்டு காப்பாற்றுவதற்கு ஒரு மாமரத்தின் கீழ் எழுந்த யுள்ள கருங்குயில் போன்றவளே மாந்தளிர் அனைய கைகளில் ஒலிக்கும் வளையல்களும் சக்ரவாகப் பறவையை ஒத்த தனங்களும் காக்கப்படுவதால் சரப ரூபியான சிவபெருமான் உனது ஆலிங் கனத்தில் குழைந்தது என்பது இயற்பொருள்.

---

164384
02௫: 33, 21192

## ஸ்ரீ தேவியை வழிபடும்
## அடியார் பெறும் இருமைப் பயன்கள்

1. சுந்தரிநின் தொண்டர்தமைத் தோய்வதற்கு
நாமகளும்
இந்திரையு மலரயன்மா லிடருழப்ப இரதியின்
கண்
அந்தமில்பே ரழகொடுகற் பழித்துநெடு
நாள்கழியச்
சிந்தையுறு பாசம்போய்ச் சிவமயத்தைச்
சேர்குவரால்

2. ஆத்தாளை யெங்கள் அபிராம வல்லியை
அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப்
புவியடங்கக்
காத்தாளை அங்குச பாசாங் குசமும்
கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு
வார்க்கொரு தீங்கில்லையே.

புவனேஸ்வரி பிரஸ், தஞ்சை.